தமிழ்நாடு சட்டப்பேரவை

திங்கட்கிழமை, 1969 மார்ச் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 246 முதல் 258 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

புத்தாம்பூர் குளம்

*259 வினா.—திரு. பெ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் புத்தாம்பூர் குளத்தைப் புதுப்பித்துத் தர வேண்டும் என்று அப்பகுதி மக்களிடமிருந்து கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை. ஆயினும், புத்தாம்பூர் கிராமத்தின் அருகே ஓடும் காட்டாற்றின் குறுக்கே குளம் ஒன்றை வெட்டலாம் என்று புத்தாம்பூர் பஞ்சாயத் தலைவர் திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தார்.

(இ) பாசனத் தலைமைப் பொறியாளர் ரூபாய் 68,500 செலவு மதிப்பீட்டில் வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பினார். இதனை அரசாங்கம் பரிசீலித்தது. செலவிடும் பணத்திற்கேற்ப இது ஆதாயம் கிட்டாது. எனவே அரசாங்கம் இவ்வேலைத் திட்டத்தைத் தள்ளி வைத்தது.

காவிரியாற்றின் கரைகளைச் சீர்படுத்தல்.

*260 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளியிலிருந்து தஞ்சாவூர் வரை காவேரி ஆற்றின் இரு கரைகளையும் பலப்படுத்தி சீர்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திருச்சி முதல் தஞ்சாவூர் வரை காவிரி ஆற்றின் இரு கரைகளும் அப்பகுதியில் ஆற்றில் செல்லும் தண்ணீரைத் தாங்கும் வகையில் உறுதியாகவே உள்ளதால் அவற்றைத் தற்போது வலுப்படுத்தும் செயற்குறிப்பு எதும் இல்லை.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தற்போது வலுவாக இருந்தபோதிலும் வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் அப்படிப்பட்ட கல்லணையில் உடைப்பு ஏற்பட்டது. ஆதலால் வருங்காலத்திலாவது வெள்ளம் வராமல் தடுப்பதற்கு அந்தக் கரைகளை பலப்படுத்தும் உத்தேசம் உண்டா ?